## உதவி அமர்வு நீதிமன்றம், தேன்கனிக்கோட்டை

முன்னிலை: திரு. விஜய்அழகிரி., பி.காம். பி.எல்.,
உதவி அமர்வு நீதிபதி, தேன்கனிக்கோட்டை,
2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27–ம் நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2056– பராபவ வருடம் – சித்திரை திங்கள் 14 ம் நாள்)

### அமர்வு வழக்கு எண். 130/2021

(தேன்கனிக்கோட்டை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டது)

### முதல்நிலை விசாரணை வழக்கு எண். 12/2021

| | |
|---|---|
| அரசுக்காக காவல் ஆய்வாளர், | ராயக்கோட்டை காவல் நிலைய குற்ற எண் 54/2017 |
| எதிரிகளின் பெயர் | A1. செல்வராஜ், த/பெ. முனியப்பன்<br>A2. முருகன், த/பெ. செல்வராஜ் |
| எதிரிகளின் மீதான குற்றச்சாட்டு | 1வது எதிரி மீது இதச பிரிவு 341, 307 உ/இ 34, 427 ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.<br>2வது எதிரி மீது இதச பிரிவு 341, 307 ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் வாதுரை | குற்றவாளிகள் இல்லை |
| நீதிமன்றத்தின் தீர்மானம் | 1வது எதிரி மீது இதச பிரிவு 341, 307 உ/இ 34, 427 ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மற்றும் 2வது எதிரி மீது இதச பிரிவு 341 மற்றும் 307 ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து கு.வி.மு.ச 235 (1) ன் கீழ் இந்த வழக்கிலிருந்து 1 மற்றும் 2 எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று முடிவு செய்து இந்த வழக்கிலிருந்து 1 மற்றும் 2 எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இந்த வழக்கானது கிருஷ்ணகிரி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் 13.12.2021 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு பின்னர் தேன்கனிக்கோட்டை உதவி அமர்வு நீதிமன்றத்திற்கு 13.12.2021 அன்று விசாரணைக்கு அனுப்பப்பட்டு இந்நீதிமன்ற கோப்பில் 16.12.2021 அன்று கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு என் முன்னர் 10.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பு கூடுதல் வழக்கறிஞர் திரு. ஆர். ரவீந்திரநாத் அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. மலர்வண்ணன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும் ....

## தீர்ப்புரை

வட்டக் காவல் ஆய்வாளர் எதிரிகள் மீது பதிவு செய்திருந்த ராயக்கோட்டை காவல் நிலைய குற்ற எண். 54/2017, எதிரிகள் மீது இதச பிரிவு 341, 324, 427, 506(2) @ 341, 427, 307 இ.த.ச. ன் கீழ் பதிவு செய்திருந்த முதல் தகவல் அறிக்கை மீது தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம்:

2. ராயக்கோட்டை வட்டக் காவல் ஆய்வாளர் எதிரிகளுக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார், அந்த இறுதி அறிக்கையில் கடந்த 19.02.2017 அன்று காலை 9.00 மணியளவில் சாட்சி சூர்யா தனது TN 70 U 5049 என்ற பதிவெண் கொண்டு இருசக்கர வாகனத்தில் காஞ்சாலம் – முகளூர் ரோட்டிலுள்ள கோடிபுதூர் மாரியம்மன் கோவில் அருகே வந்து கொண்டிருந்தபோது 1, 2 எதிரிகள் இருவரும் குடும்ப நிலப்பிரச்சனை முன் விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு சாட்சி சூர்யாவை சட்ட விரோதமாக தடுத்து நிறுத்தி 2ம் எதிரி முருகன் மறைத்து வைத்திருந்த கத்தியால் சாட்சியை வலதுபுற கழுத்தில் வெட்ட வந்தபோது அவர் சாய்ந்து கொண்டதால் 2வது எதிரி சூர்யாவின் வலது முழங்காலில் வெட்டி சாட்சி சூரியாவிற்கு மரண பயத்தை ஏற்படுத்தியும், அதன் தொடர்ச்சியாக 1வது எதிரி சாட்சி சூரியா இருசக்கரவாகனத்திலிருந்து கீழே விழுந்தபோது சாட்சி சூரியாவின் செல்போன் கீழே

விழுந்தததை 1வது எதிரி சாட்சி சூரியாவின் ரூ.10,000/- மதிப்புள்ள செல்போனை ரோட்டில் தூக்கிபோட்டு உடைத்த குற்றத்திற்காக எதிரிகள் மீது இதச பிரிவு 341, 307 உ/இ 34, 427 ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக இறுதி அறிக்கை எதிரிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிரிகள் மீது இதச பிரிவு 341, 307 உ/இ 34, 427 ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. தேன்கனிக்கோட்டை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு குற்ற அறிக்கையை பரிசீலித்து, முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண். 12/2021 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தையும் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகள் மீது இதச பிரிவு 341, 307 உ/இ 34, 427 ன் கீழான குற்றமானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால் மேல் விசாரணைக்கு கிருஷ்ணகிரி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் அனுப்பி வைக்கப்பட்டது. பின்னர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம் இவ்வழக்கை கோப்புக்கு எடுத்து வழக்கு விசாரணைக்காக இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி இந்த நீதிமன்றத்தால் பெறப்பட்டது.

4. வழக்கு ஆவணங்கள் மற்றும் இருதரப்பு வாதுரைகள் பரிசீலிக்கப்பட்டது. எதிரிகள் குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதற்கு அனுமானிக்கத்தக்க ஆதாரங்கள் உள்ளதால் 1வது எதிரி மீது இதச பிரிவு 341, 307 உ/இ 34, 427 ன் கீழ் குற்றசாட்டுக்களும், 2வது எதிரி மீது இதச பிரிவு 341 மற்றும் 307 ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து பதிவு செய்து 1, 2 எதிரிகளிடம் அது குறித்து படித்து காட்டி வினவியபோது 1, 2 எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தும் குற்றவாளிகள் இல்லை என்றும், விசாரணை செய்ய கோரினார்கள்.

5. அரசு தரப்பில் வழக்கினை மெய்பிக்க அ.சா.1 முதல் அ.சா.12 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. சா.பொ. 1 அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் 2ம் எதிரி எ..சா.1 ஆக விசாரிக்கப்பட்டு

எ.த.சா.ஆ.1 முதல் எ.த.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6. அரசு தரப்பு சாட்சிகளின் அடிப்படையில் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

**அ.சா.1 சூர்யா, தனது சாட்சியத்தில்,** தான் சொன்னம்பட்டியில் குடியிருந்து வருகிறேன் என்றும், தான் வழக்கறிஞராக ஒசூர் நீதிமன்றங்களில் தொழில் செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், தங்களுக்கும் எதிரிகளுக்கும் நில தகராறு 2011 முதல் உள்ளது. எனது அப்பா சொத்து தொடர்பாக தேன்கனிக்கோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து இருந்தார் என்றும், அதனால் எங்களுக்கும் எதிரிகளுக்கும் முன் விரோதம் இருந்தது. 2017 ம் வருடம் தான் ஆந்திராவில் உள்ள சட்டக்கல்லூரியில் படித்து கொண்டு இருந்தேன். எனது கல்லூரி பெயர் டாக்டர் அம்பேத்கர் கிலோபல் லா இன்ஸ்டியூட் திருப்பதி. 2017 ல் இன்டன்சிப்க்காக வழக்கறிஞர் வெங்கடேஷ் குமாருடன் ஒசூரில் நான் நீதிமன்றத்திற்கு சென்று வந்துகொண்டு இருந்தேன் என்றும், கடந்த 19.02.2017 அன்று காலை 8.30 மணிக்கு எனது வீட்டில் எனது அம்மா காஞ்சாலம் கிராமத்தில் உள்ள தனது உறவினர் இறந்துவிட்டதாக சொல்லி கொண்டு இருந்தார் என்றும், தனது அம்மா தன்னை அந்த இறப்பிற்கு அழைத்து சென்று விடும்படி கேட்டார் என்றும், அதனால் தனது இருசக்கர வாகனம் பதிவு எண்..டிஎன்70 யு5049 ல் எங்கள் வீட்டில் இருந்து காஞ்சாலம் இறப்பு வீட்டிற்கு எனது அம்மாவை அழைத்து சென்று அங்கு விட்டுவிட்டு மறுபடியும் திரும்ப இராயக்கோட்டை அருகில் வந்து கொண்டு இருந்தேன் என்றும், கோடிபுதுர் மாரியம்மன் கோவில் அருகில் வந்த போது காலை சுமார் 9.00 மணி இருக்கும் என்றும், தனக்கு எதிராக எதிரிகள் இருசக்கர வாகனத்தில் வந்து எனது வண்டியை தடுத்தார்கள். எதிரி முருகன் கொடுவாளை எடுத்து வந்து எனது கழுத்தை வெட்ட வந்தார் என்றும், தான் இடது பக்கம் சாய்ந்து விட்டேன். அவர் வீசிய அருவாள் தனது இடது காலில் முட்டிக்கு அருகில் வெட்டி விட்டது. நான் வண்டியில் இருந்து சாய்ந்தேன் என்றும், தனது பாக்கெட்டில் இருந்து போன் கீழே விழுந்தது என்றும், அதை எதிரி செல்வராஜ் எடுத்து தரையில் போட்டு

உடைத்துவிட்டார் என்றும், செல்வராஜ் அவன் ஓடிவிடுவான் அவன் காலை வெட்டு டா முருகா என்று சொன்னார் என்றும், முருகன் கொடுவாளால் எடுத்து எனது இடது காலில் முழங்கால் பகுதியில் வெட்டி விட்டார் என்றும், தான் சத்தம் போட்டேன் என்றும், தனது தாய்மாமா மாது என்பவர் பக்கத்து நிலத்தில் விவசாயம் செய்து கொண்டு இருந்தார் அவர் சத்தம் கேட்டு தடுக்க ஓடி வந்தார். அக்கம் பக்கம் இருந்தவர்களும் தடுப்பதற்காக ஓடி வந்தார்கள். ஆட்கள் வருவதை பார்த்தவுடன் எதிரிகள் இருவரும் இனி நிலம் பக்கம் வந்தால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள் என்றும், அதன்பிறகு அவர்கள் வந்த இருசக்கர வாகனத்தில் சென்று விட்டார்கள் என்றும், தனக்கு ரத்தம் அதிகமாக வந்ததால் எனது மாமா மாது இருசக்கர வாகனத்தில் தன்னை அழைத்து கொண்டு இரயாக்கோட்டை சுதாகர் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார் என்றும், சம்பவம் பற்றி எனது மாமா தொலைபேசி மூலம் வீட்டில் உள்ளவர்களுக்கு தகவல் சொன்னார்கள். வழக்கறிஞர் வெங்கடேஸ் குமாருக்கும் தகவல் சொன்னார்கள். இராயக்கோட்டை சுகாதார நிலலையத்தில் எனக்கு முதல் உதவி சிகிச்சை வழங்கினார்கள் என்றும், காயம் அதிகாமாக இருப்பதால் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு என்னை அழைத்து செல்லும படி சொன்னார்கள். 108 ஆம்புலன்ஸ் வருவதற்கு காலதாமதம் ஆனதால் வழக்கறிஞர் வெங்கடேஷ் குமார் அவருடைய இருசக்கர வாகனத்தில் என்னை கிருஷ்ணகிரி அரசு மருத்துவனைக்கு அழைத்து சென்றார் என்றும், தனக்கு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை செய்தார்கள் அன்று மாலையில் இராயக்கோட்டை போலிசாரிடம் நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது தான் என்றும், அது அ.த.சா.ஆ–1. சம்பவத்தின் போது எதிரிகள் பயன்படுத்திய ஆயுதம் கொடுவாள் நீதிமன்றத்தில் உள்ளது தான் என்றும், அது சா.பொ.1 . மறுபடியும் அதே நாள் மாருதி நர்சிங் ஓம் கிருஷ்ணகிரியில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றும், அந்த மருத்துவமனையில் 20 நாள் நான் சிகிச்சை பெற்றேன். ஓரளவுக்கு சரியானவுடன் நான் கல்லூரிக்கு சென்றேன். மறுபடியும் வலி அதிகமானதால் நான் கல்லூரியில் இருந்து வீட்டிற்கு வந்துவிட்டேன் என்றும், ஒசூர் காவேரி மருத்துவமனையில்

பரிசோதித்து பார்த்தோம் என்றும், தனது கால் எலும்பு சீல் பிடித்து பலவீனமாக உள்ளது அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள் என்றும், காவேரி மருத்துவனையில் அறுவை சிகிச்சை செய்து எனது காலில் ராடு வைத்தார்கள் என்றும், இது தொடர்பாக போலிசார் தன்னை ஆகஸ்ட் மாதம் விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா.2 மாது தனது சாட்சியத்தில்,** தான் தற்போது சொன்னம்பட்டியில் குடியிருந்து வருகிறேன் என்றும், விவசாயம் செய்து வருகிறேன் என்றும், அ.சா.1 ஐ தனக்கு தெரியும் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், அ.சா.1 திருப்பதியில் சட்டக்கல்லூரியில் படித்து வந்தார்என்றும், விடுமுறை காலத்தில் வீட்டிற்கு வந்தார் என்றும், காஞ்சாலம் கிராமத்தில் தனது உறவினர் இறந்துவிட்டார் என்றும், அதை பார்ப்பதற்காக அ.சா.1 ம் அவரது அம்மாவும் சென்றார்கள் என்றும், தன் தங்கையை விட்டுவிட்டு அ.சா.1 திரும்ப வந்துள்ளார் என்றும், ஏற்கனவே அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் 2011 ம் வருடம் நிலத்தகராறு இருந்தது என்றும், அ.சா.1 கோடிபுதுரில் வந்த போது எதிரி செல்வராஜ் வண்டி ஓட்டி இருந்தார். முருகன் பின்னால் அமர்ந்து வந்தார் என்றும், எதிர்புறம் வந்து வண்டியை நிறுத்தி விட்டு அ.சா.1 ஐ வெட்ட வந்துள்ளார்கள் என்றும், அவர் சாய்ந்து விட்டார் அதனால் அவரது இடது காலில் வெட்டு உழுந்தது என்றும், அதன்பின்பு எதிரி செல்வராஜ் ஓடுகிறான் காலை முதலில் வெட்டு என்று சொல்லி உள்ளார் என்றும், இன்றோடு கிளோஸ் என்று சொல்லி முருகன் அ.சா.1 ஐ வெட்டி உள்ளார். நான் பக்கத்தில் கொள்ளு பயிர் செய்து இருந்தேன் என்றும், தான் ஓடி வந்து கத்தினேன். வந்தால் உன்னையும் வெட்டாமல் விடுவதில்லை என்று முருகன் சொன்னார் என்றும், மற்றவர்கள் வருவதற்குள் வண்டியை எடுத்து கொண்டு எதிரிகள் சென்றுவிட்டார்கள் என்றும், தான் அ.சா.1 ஐ இராயக்கோட்டை அரசு மருத்துவனைக்கு அழைத்து கொண்டு சென்றேன் என்றும், தனது தங்கை மாதம்மாவிற்கு போன் செய்து நடந்த விவரத்தை சொன்னேன் என்றும், தனது தம்பி சண்முகத்துக்கும் போன் செய்து தகவல் சொன்னேன் என்றும், அதன்பின்பு வழக்கறிஞர் வெங்கடேஷ் குமாருக்கு போன் செய்து தகவல் சொன்னேன் என்றும், அ.சா.1 க்கு முதல் உதவி சிகிச்சை இராயக்கோட்டை மருத்துவமனையில்

வழங்கினார்கள் என்றும், வெட்டு காயம் அதிகாமாக உள்ளது கிருஷ்ணகிரிக்கு செல்லுங்கள் என்று சொன்னார்கள் என்றும், ஆம்புலன்ஸ் வரவில்லை வெங்கடேஷ் குமார் வழக்கறிஞருடன் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றார் என்றும், கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் மாலை வரை அ.சா.1 சிகிச்சை பெற்றார் என்றும், அதன்பின்பு தனியார் மருத்துவமனைக்கு அ.சா.1 சிகிச்சையில் சேர்ந்தார் என்றும், மாருதி நர்சிங் ஓம்மில் அ.சா.1 15 நாள் சிகிச்சை பெற்றார். அ.சா.1 அதன்பின்பு படிப்பதற்காக சென்றார் என்றும், 4, 5 நாள் கழித்து கால் வலி ஏற்பட்டதால் அ.சா.1 ஊருக்கு வந்தார் என்றும், அ.சா.1 ஐ ஒசூர் காவேரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம்என்றும், மருத்துவமனையில் அ.சா.1 காலில் சீல் பிடித்துள்ளதாக சொல்லி மறு சிசிக்சை செய்து ராடு வைத்தார்கள். போலிசார் ஊருக்கு வந்தார்கள் என்றும், அவர்கள் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா.3 மாதம்மாள் தனது சாட்சியத்தில்,** தான் சொன்னேயம்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், அ.சா.1 தனது மகன் என்றும், தன் மகன் ஆந்திரா திருப்பதில் உள்ள அம்பேத்கர் சட்ட கல்லூரியில் சட்டம் படித்தார் என்றும், ஒருமாத பயிற்சிக்காக தன் மகன் வீட்டிற்கு வந்து இருந்தார் என்றும், ஒசூர் வெங்கடேஷ் குமார் வழக்கறிஞரிடம் எனது மகனை அனுப்பி இருந்தேன் என்றும், பயிற்சிக்கு சென்று விட்டு தினமும் தன் மகன் வீட்டிற்கு வருவார் என்றும், கோடிபுதுர் அருகில் தனது சொந்த நிலம் உள்ளது என்றும், எதிரிகளுக்கு தங்கள் நிலத்திற்கு அருகில் நிலம் உள்ளது என்றும், 2011 முதல் எங்களுக்கும் எதிரிகளுக்கும் நில பிரச்சனை உள்ளது என்றும், காஞ்சாலத்தில் தனது உறவினர் இறந்துவிட்டர் என்றும், 19.02.2017 அன்று அ.சா.1 ஐ தன்னை இறப்பிற்கு அழைத்து செல்லும் படி சொன்னேன் என்றும், அவர் அவரது இருசக்கர வாகனத்தில் தன்னை இறப்பிற்கு அழைத்து சென்றார் என்றும், தன்னை விட்டுவிட்டு அ.சா.1 திரும்ப வந்து கொண்டு இருந்தார் என்றும், கோடிபுதுர் மாரியம்மன் கோவில் அருகில் எதிரிகள் அ.சா.1 வண்டியை தடுத்து நிறுத்தி எதிரி செல்வராஜ் தலையை வெட்ட வந்துள்ளார் என்றும், அவர் வளைந்து கொண்டதால் தான் காலில் வெட்டி

உள்ளார்கள். அ.சா.1 போன் கீழே விழுந்து உள்ளது அதை எடுத்து செல்வராஜ் உடைத்துள்ளார். செல்வராஜ் முருகனை பார்த்து இவன் ஓடிவிடுவான் காலை வெட்டு என்று சொல்லி உள்ளார் என்றும், இனிமேல் நிலத்திற்கு அருகில் வந்தால் உயிருடன் விடமாட்டோம் என்று சொல்லி உள்ளார்கள் என்றும், பக்கத்தில் இருந்தவர்கள் வந்ததாதல் எதிரிகள் அவர்களது வண்டியில் திரும்பி சென்றுள்ளார்கள் என்றும், இனிமேல் யாராவது நிலத்திற்கு அருகில் வந்தால் முடிக்காமல் விடமாட்டோம் என்று சொல்லி உள்ளார்கள் என்றும், மேற்படி சம்பவத்தை போனில் அ.சா.2 மாது என்னிடம் சொன்னார் என்றும், தான் தன் மகனை இராயக்கோட்டை அரசு மருத்துவமனையில் போய் பார்த்தேன் என்றும், தான் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றும், வழக்கறிஞர் வெங்கடேஷ் குமார் வந்து எங்களது வண்டியில் அ.சா.1 ஐ கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளார் என்றும், தன்னை போலிசார் விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா.4 வெங்கடேஷ் குமார், தனது சாட்சியத்தில்,** தான் நெல்லூரில் வசிக்கிறேன் என்றும், வழக்கறிஞராக தொழில் செய்கிறேன் என்றும், அ.சா.1 ஐ எனக்கு தெரியும் என்றும், ஆஜர் எதிரிகளையும் தனக்கு தெரியும் என்றும், கடந்த 19.02.2017 அன்று தான் வீட்டில் இருந்தேன் என்றும், சுமார் 10.00 மணிக்கு மாது என்பவர் தனக்கு போன் செய்தார் என்றும், அ.சா.1 அவரது தாயாரை காஞ்சாலம் கிராமத்தில் ஒரு துக்கத்திற்கு அழைத்து சென்று விட்டுவிட்டு திரும்பி வரும் போது கோடிபுதுர் மாரியம்மன் கோவில் அருகில் ஆஜர் எதிரிகள் அ.சா.1 ஐ தடுத்து நிறுத்தி கொலை செய்யும் நோக்கத்தில் வெட்டியதாகவும் அந்த இடத்தில் அ.சா.1 வண்டியுடன் கீழே விழுந்து விட்டதாக மாது என்பவர் தன்னிடம் சொன்னார் என்றும், ஆஜர் எதிரி செல்வராஜ் அ.சா.1 ஓடி விடக்கூடாது காலை வெட்டு என்று சொன்னதால் எதிரி முருகன் அ.சா.1 ன் காலை வெட்டியதாக தனக்கு தகவல் சொன்னார்கள் என்றும், அ.சா.1 இராயக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெற்று வருவதாக சாட்சி மாது எனக்கு சொன்னார் என்றும், அங்கு வரும்படி கேட்டு கொண்டார். நான் அ.சா.1 ஐ இராயக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் போய் பார்த்தேன் என்றும், அவருக்கு முதல் உதவி செய்து கொண்டு இருந்தார்கள் என்றும், அவரது வலது

காலின் முட்டியிலும், கணுக்காலிலும் காயம் இருந்தது. அ.சா.1 ஐ நான் வண்டியில் அழைத்து சென்று கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன் என்றும், போலிசார் என்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா.5 சண்முகம் தனது சாட்சியத்தில்,** தான் சொன்னேபட்டியில் வசித்து வருகிறேன் என்றும், ஆசிரியர் பணி செய்கிறேன் என்றும், தான் தற்போது காவேரிபட்டினம் பக்கத்தில் உள்ள விநாயக வித்யாலய பள்ளியில் பணி புரிந்து வருகிறேன் என்றும், சம்பவத்தின் போது விஜய் வித்யாலையா பள்ளியில் கிருஷ்ணகிரியில் இருந்தேன் என்றும், அ.சா.1 ஐ தெரியும் எதிரிகளை தெரியும் என்றும், 19.02.2017 அன்று தான் நெடுங்கல்லில் இருந்தேன் என்றும், தான் தன் மனைவியை நெடுங்கல்லுக்கு அழைத்து சென்றேன் என்றும், காலை 9.30 மணிக்கு எனது அண்ணன் மாது தனக்கு போன் செய்தார். நமது உறவினர் காஞ்சாலம் கிராமத்தில் இறந்துவிட்டார் என்றும், அவரது இறப்பிற்கு அசா.1 அவரது அம்மாவை அழைத்து சென்றுள்ளார் என்றும், திரும்பி வரும் போது எதிரிகள் அ.சா.1 ஐ வழி மறித்து தடுத்து அ.சா.1 ஐ கொலை செய்ய கழுத்தை வெட்டும் போது அ.சா.1 வளைந்துள்ளார் என்றும், அதனால் வெட்டு காலில் பட்டுள்ளது. அப்போது போன் கீழே விழுந்து விட்டது. அந்த போனை செல்வராஜ் உடைத்து விட்டார் என்றும், அதன்பின்பு அ.சா.1 தப்பி ஓடும் போது செல்வராஜ் அவனை விடாதே கொலை செய்தாக வேண்டும் என்று முருகனை பார்த்து சொல்லி உள்ளார் என்றும், அவனை காலை வெட்டு என்று சொல்லி உள்ளார். அதனால் அவர்கள் வெட்டியதில் அ.சா.1 கீழே விழுந்து விட்டதாகவும் பக்கத்தில் நிலத்தில் இருந்த மாது அங்கு ஓடி உள்ளார் என்றும், இனிமேல் எதிரிகள் இனிமேல் நிலத்திற்கு அருகில் வந்தால் உங்களை கொடுவாளால் வெட்டுவோம் என்று கொடுவாளை காண்பித்துள்ளார்கள் என்றும், மேற்படி சம்பவம் பற்றி அ.சா.2 மாது என்னிடம் சொன்னார். நான் இராயக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று அ.சா.1 ஐ பார்த்தேன். அவருக்கு முதல் உதவி செய்து இருந்தார்கள் என்றும், வலி அதிகமாக இருந்ததால் அரசு மருத்துவமனை கிருஷ்ணகிரிக்கு செல்லும் படி சொன்னார்கள்என்றும், ஆம்புலன்ஸ் வரவில்லை. அதனால் வெங்கடேஷ் குமார் வழக்கறிஞர் அ.சா.1 இருசக்கர வாகனத்தில்

மருத்துவனைக்கு அழைத்து சென்றார்என்றும், கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் அ.சா.1 சிகிக்சைக்கு சேர்த்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், மாலை 5 மணிக்கு மாருதி நர்சிங் ஓம்மில் அ.சா.1 சிகிச்சைக்கு சேர்த்தோம். 10 நாள் கழித்து போலிசார் என்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா.6 அரிச்சந்திரன் தனது சாட்சியத்தில்,** தான் சென்னேம்பட்டியில் குடியிருக்கிறேன் என்றும், தான் கூலி வேலை செய்கிறேன் என்றும், அ.சா.1 தனக்கு தெரியும் என்றும், சுமார் 6, 7 வருடத்திற்கு முன்பு காலை 9 மணிக்கு கோடிபுதுர் பள்ளிக்கு பின்புறம் சென்று கொண்டு இருந்தேன் என்றும், கூட்டமாக இருந்தார்கள் என்றும், சத்தம் கேட்டது ஓடிபோய் பார்த்தேன் என்றும், அங்கு 4, 5 பேர் இருந்தார்கள் கூட்டத்தில் ஒன்றும் புரியவில்லை. முருகனும் செல்வராஜும் இராயக்கோட்டை வழியாக வண்டியில் வந்தார்கள் என்றும், 10 நாள் கழித்து தான் பள்ளி அருகில் சென்றேன் என்றும், மதியம் 1 மணிக்கு இராயக்கோட்டை போலிசார் அங்கு வந்தார்கள். சம்பவ இடத்தை அடையாம் காட்டினேன் போலிசார் படம் வரைந்தார்கள் என்றும், போலிசார் தன்னிடம் கையெழுத்து போடும்படி கேட்டார்கள் என்றும், நாகராஜ் முதலில் கையெழுத்து போட்டார் தான் 2வது கையெழுத்து போட்டேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும்,அந்த பார்வை மகஜர். **அ.த.சா.ஆ.2.** தன்னை போலிசார் விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா.7 மாரப்பன் தனது சாட்சியத்தில்,** தற்போது நான் கெலமங்கலம் காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளராகவும் இந்த நீதிமன்றத்தின் ராயக்கோட்டை மற்றும் கெலமங்கலம் நீதிமன்ற சிறப்பு உதவி அய்வாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கின் மருத்துவரான Lw9 திருமதி.சங்கீதபிரியா அரசு மருத்துவர் அவர்களுக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் அதை பெற்று கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்காமல் தலைமறைவாக உள்ளார்.மேலும் சாட்சி நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க மறுத்துவருகிறார். ஆகையால் இந்த வழக்கில் அவர் சாட்சியத்தை பெற வேண்டி அவர் மீது பிடியாணை கட்டளை

பிறப்பித்து உத்தரவிடுமாறு இந்த நீதிமன்றத்தில் தாழ்மையுடன் பிரார்த்தித்துக்கொள்கிறேன். இந்த சாட்சி மூலமாக நீதிமன்றத்திற்கு கொடுக்கப்பட்ட சாட்சி சம்மன் **அ.சா.ஆ.3** ஆகவும் மற்றும் ராயக்கோட்டை காவல் ஆய்வாளர் வழங்கிய கடிதம் **அ.சா.ஆ.4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா.8 Dr. சங்கீதா பிரியா தனது சாட்சியத்தில்,** தான் தற்போது கோயம்புத்துரில் உள்ள கற்பகம் Faculty of Medical Science என்ற தனியார் கல்லுரியில் MD Community Medicine 2 வது வருடம் படித்து வருகிறேன் என்றும், கடந்த 19.02.2017 ம் ஆண்டு அரசு தலைமை மருததுவமனையில் கிருஷ்ணகிரி அரசு Assistant Surgeon/CMO ஆக பணியில் இருந்த போது மதியம் சுமார் 1.15 மணிக்கு திரு. சூர்யா என்ற நபரை வேரது நண்பர் வெங்கடேஷ் குமார் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார் என்றும், தான் சூர்யாவை விசாரித்தபோது 19.02.2017 ம் தேதி சுமார் 9 மணி அளவில் கோடிப்புதுர் கிராமம் கொப்பக்கரை அஞ்சல், 2 தெரிந்த நபர்கள் தன்னை கத்தியால் தாக்கியதாக கூறினார் என்றும், தான் அவரை பரிசோதனை செய்தபோதுகீழ் கண்ட காயங்கள் தென்பட்டது என்றும், 1. வலது காலில் 4x 1 cm அளவிற்கான ஒரு வெட்டு காயம் காணப்பட்டது என்றும், தான் அவரை உள் நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கினேன் என்றும், அவருக்கு X–ray எடுத்துப்பார்த்ததில் அவருக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது என்றும், அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று நிபுனர்கள் பரிந்துரையின் அடிப்படையில் சான்று வழங்கினேன் என்றும், இந்த சாட்சியின் மூலமாக காயச்சான்றிதழ் **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா.9 மகாதேவன், Inspector of Police தனது சாட்சியத்தில்,** தான் தற்போது ஓசூர் காவல் கட்டுப்பாட்டு அறையில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் என்றும், கடந்த 2017 ம் வருடம் ராயக்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது 19.02.2017 ம் தேதி காலை சுமார் 9 மணிக்கு நான் நிலையத்தில் இருந்தபோது இராயக்கோட்டை GH ல் வந்த தகவலின் பேரில் தலைமைக்காவலர் முருகனை வாக்குமூலம் பதிவு செய்ய அந்த

மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன் என்றும், அவர் வாதியிடம் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து 17 மணிக்கு அளித்தார் என்றும், அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் நான் CSR மனு 34/2017 ல் பதிவு செய்தேன் என்றும், பிறகு தான் பதிவு செய்த CSR தானே பரிசீலனை செய்து அது Civil Dispute புகாராக இருந்ததால் எதிரிகள் வாதியை தாக்கி கொலை முயற்சி செய்ததாக முதல் கட்ட விசாரணையில் தெரியவந்ததால் தான் முதல் தகவல் அறிக்கை ச.பி.341, 324, 427, 506(2) இ.த.ச. கீழ் பதிவு செய்தேன் என்றும், தான் வழக்கை தனது புலன் விசாரணையில் எடுத்துக்கொண்டு தான் முதலில் சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இட மூலமாக FIR **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், தான் FIR Cr.No.54/2017 பதிவு செய்து பதிவு செய்த தட்டச்சு FIR ஐ மேல் அதிகாரிக்கும் கணம் குற்றவியல் நீதிமன்றத்திற்கும் அனுப்பி வைத்து சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான நாகராஜ் மற்றும் அரிசந்திரன் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வை இட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன் என்றும், மேலும் சம்பவ இடத்திற்கு சுமார் 10 அடி தூரத்தல் முற்புதரில் இருந்த இரும்பு கைப்பிடி போட்ட கொடுவாள், அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன் என்றும், பிறகு இந்த வழக்கின் சாட்சிகளை 1 முதல் 8 சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், இந்த வழக்கு ஆய்வாளர் விசாரணை செய்யக்கூடிய வழக்காக மாறியதால் தான் அனைத்து வழக்கு கோப்புகளும் ஆய்வளர் வசம் ஒப்படைத்தேன் என்றும், ஆய்வாளர் வழக்கு கோப்புகளை எடுத்துகொண்டு நான் விசாரித்த சாட்சிகளை மீண்டும் விசாரித்து அவர் புலன் விசாரணையை தொடங்கினார் என்றும், சாட்சியிடம் சான்று பொள் MOA1 காட்டபட்டது இது தான் சம்பவ இத்தின் அருகாமையில் இருந்து எடுத்தாக கூறினார்ங இந்த சாட்சி மூலமாக பார்வை மகசர் **அ.த.சா.ஆ.7** ஆகவும், வரைபடம் **அ.த.சா.ஆ.8** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.10 மாரப்பன் தனது சாட்சியத்தில், நான் தற்போது கெலமங்கலம் காவல்நிலையத்தில் SSI ஆகவும் Assistant Sessions Court, Denkanikottai நீதிமன்றத்தில் நீதிமன்ற காவலராக பணியாற்றி வருகிறேன். **SC.130/2021** என்ற வழக்கில் Lw13 திரு.கமலேசன் ஆய்வாளர் நிதிமன்ற அழைப்பானையை வாங்காமலும்

நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வராமலும் உள்ளார், அவர் தற்போது சேலத்தில் பணியாற்றி வருகிறார் ஆகையாகல் அவரது சாட்சியத்தை பேறவேண்டி அவர்மீது பிடியாணை வழங்கும் படி இந்த நீதிமன்றத்தை தாழ்மையுடன் பிராத்திதுக்கொள்கிறேன். இந்த சாட்சி மூலமாக ஆய்வாளர் வழங்கிய வேண்டுகோள் கடிதம் **அ.த.சா.ஆ. 9** ஆக குறியீடு செய்யப்படுகிறது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா.11 பெரியதம்பி தனது சாட்சியத்தில்** நான் தற்போது ராயக்கோட்டை காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.SC.27/2018 என்ற வழக்கில் எதிரி சிவகுமார் (எ) சிவா என்பவருக்கு பிறப்பிக்கப்ட்ட பிடியாணையை நிறைவேற்ற இயலவில்லை.எதிரி எங்கு உள்ளார் என்பது தெரியவில்லை. நான் தனிப்படையை வைத்து அவரை தேடியபோது அவர்களுக்கு அவர்களை பிடிக்கவேண்டி அவர்களுக்கு பினை அளித்த நபர்களை பிடித்து விசாரித்தபோது அவர்கள் பணத்திற்காக பினை அளித்ததை தெரிந்துகொண்டேன்.அவர்களை மாண்பு மிகு நீதிமன்றத்தில் 27.02.2025 ம் தேதி ஆஜர் படுத்தினேன்.அவர்கள் தங்களுக்கு எதிரிகளை தெரியாது என்றும் பணத்திற்காக ஜாமின் அளித்தாக கூறி ஜாமின் தொகை ரூ.20000 ஐ நீதிமன்றத்தில் செலுத்தி அவர்கள் ஜாமின் பத்திரத்தை இரத்து செய்ய கூறியதன்பேரில் அவர்களது ஜாமின் பத்திரம் இந்த மாண்பு மிகு நீதிமன்றத்தால் இரத்து செய்யப்பட்டது.ஆகையால் எதிரியை தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்க Proceedings Initiate செய்ய வேண்டுகோள் விடுக்கும் பொருட்டு சாட்சி அளிக்க வந்துள்ளேன். ஆகையால் கனம் நீதிமன்றம் எதிரியை தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த சாட்சி மூலமாக இந்த சாட்சி வழங்கிய வேண்டுகோள் கடிதம் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா.12 கமலேசன் தனது சாட்சியத்தில்,** தான் தற்போது நீலகிரி மாவட்டம், மாவட்ட குற்ற பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் என்றும், கடந்த 22.01.2021ம் தேதி ராயக்கோட்டை வட்ட காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது ராயக்கோட்டை காவல் நிலைய குற்ற எண் 54/2017 சட்டப்பிரிவு 341, 427, 307, 34 இ.த.ச. Alter 341, 477, 307 வழக்கை காவல் சிறப்பு

உதவி ஆய்வாளர் மகாதேவன் என்பவர் வழக்கு பதிவு செய்து முதல் விசாரணை முடித்து வைத்திருந்தததை தனக்கு முன் காவல் ஆய்வாளராக இருந்த திரு. சண்முக சுந்தரம் அவர்கள் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு விசாரணை செய்துள்ளார் என்றும், தற்போது திரு. சண்முகசுந்தரம் திருப்புவனம் சப்டிவிசன் DSP ஆக இருந்து தற்போது பணி நீக்கத்தில் இருப்பதால் அவர் பங்கினையும் சேர்த்து தான் தலைமைகாவலர் 871, காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் மகாதேவன் ஆகியோர்களை விசாரித்து பிறகு சாட்சி 1 சூர்யா என்பவருக்கு மறு வாக்கு மூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பிறகு தான் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு, சம்பவ இட சாட்சிகளை விசாரணை தன்னிடமும் கூறியதால் தான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், காவல் சிறப்பு உதவு ஆய்வாளர் மகாதேவன் என்பவர் கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.10 ஆகும். பிறகு குற்ற தொடர்பு துறை துணை இயக்குநர் அவர்களிடம் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.11 ஆகும். அதற்குண்டான படிவம் 95 அ.த.சா.ஆ.12 ஆகும். தன்னுடைய விசாரணையை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. சட்டப்பிரிவுகள் 341, 427, 307, 34ன் படி இறுதி அறிக்கை ஐ தேன்கனிக்கோட்டை குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும், ஆவணங்களில் இருந்தும் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சான்றுகள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து குவிமுச பிரிவு 313 (1) (ஆ) கீழ் வினவிய போது எதிரிகள் சாட்சியங்களை பொய்சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்துரைத்துள்ளனர். அ.சா.7, அ.சா.10 மற்றும் அ.சா.11 சாட்சிகளானவர்கள் இவ்வழக்கு அரசு தரப்பு சாட்சியான மருத்துவர் சங்கீதபிரியா அவர்களுக்கு சாட்சி அழைப்பாணை அனுப்பப்பட்ட அதை பெற்றுக்கொண்டு அவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க ஆஜராகதததால் அவருக்கு கொடுக்கப்பட்டு சாட்சி சம்மன் அ.த.சா.ஆ.3 ஆகவும், ராயக்கோட்டை காவல் ஆய்வாளர் வழங்கிய கடிதம் அ.த.சா.ஆ.4 ஆகவும், அதேபோல் புலன்விசாரணை அதிகாரிக்கு சாட்சி சம்மன் சார்வு செய்யாததால் அதற்காக அ.சா.10 விசாரிக்கப்பட்டுள்ளார். அவர்மூலம் ஆய்வாளர் வழங்கிய வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.9 ஆகவும், மேலும் அ.சா.11 ஆக

ராயக்கோட்டை வட்ட ஆய்வாளர் இவ்வழக்கு புலன் விசாரணை அதிகாரியை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வது சம்மந்தமாக விசாரிக்கப்பட்டிருக்கிறார். மேற்படி அ.சா.7, அ.சா.10 மற்றும் அ.சா.11 மற்றும் அ.த.சா.ஆ.3, அ.த.சா.ஆ.4, அ.த.சா.ஆ.9 ஆகியவைகள் இவ்வழக்கு எதிரிகளுக்கு எதிராக தீர்மானிப்பதற்கு மேற்படி அ.சா.7, அ.சா.10 மற்றும் அ.சா.11, அ.த.சா.ஆ.3, அ.த.சா.ஆ.4, அ.த.சா.ஆ.9 ஆகிய சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஆனது இவ்வழக்கை தீர்மானிப்பதற்கு அவசியமற்றது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

<u>8. தீர்மாணிக்கப்பட வேண்டிய விஷயம்:</u>

இவ்வழக்கில் தீர்வுக்குள்ள பிரச்சனை யாதெனில், 1வது எதிரி மீது இதச பிரிவு 341, 307 உ/இ 34, 427 ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மற்றும் 2வது எதிரி மீது இதச பிரிவு 341 மற்றும் 307 ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

அரசு தரப்பு வழக்கானது அரசு தரப்பு வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் வாயிலாக எதிரிகளுக்கு எதிராக வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்கையில்,

இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 அவரது புகாரான அ.த.சா.ஆ.1 ல் கடந்த 19.02.2017 அன்று காலை 09.00 மணியளவில் TN 70 U 5049 Hero HF Delux என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் தான் ஓட்டிக்கொண்டு பாஞ்சாலம் – முகளூர் ரோட்டில் உள்ள கோடிபுதூர் அருகே உள்ள மாரியம்மன் கோவில் அருகே வந்து கொண்டிருந்தபோது தனக்கு எதிரே இரண்டு சக்கர வாகனத்தில் வந்த செல்வராஜ் அவரது மகன் முருகன் இருவரும் எனக்கு குறுக்கே வண்டியை நிறுத்தி என்னை தடுத்தார்கள். அவர்கள் நில பிரச்சனையை மனதில் வைத்து முருகன் மறைத்து வைத்திருந்த கொடுவாளால் எனது வலது புற கழுத்தில் வெட்ட வந்த போது நான் சாய்ந்து கொண்டதால் அவன் எனது வலது முழங்காலில் வெட்டியதில் பலத்த ரத்தகாயம் ஏற்பட்டுவிட்டது. தான் வண்டியிலிருந்து கீழே விழுந்தபோது எனது

மைக்ரோமேக்ஸ் செல்போன் கீழே விழுந்துவிட்டது. அதை செல்வராஜ் எடுத்து கீழே போட்டு உடைத்துவிட்டார். செல்வராஜ் அவரது மகனிடம் ஓடிவிடுவான் முதலில் அவனது காலை வெட்டுடா முருகா என்று சொன்னபோது முருகன் அதே கொடுவாளால் மீண்டும் எனது வலது முழங்காலில் வெட்டி இரத்த காயத்தை ஏற்படுத்தினார். நான் வலி தாங்காமல் சத்தம் போடவே அருகில் இருந்தவர்கள் மற்றும் எனது மாமா மாது ஆகியோர் வருவதை பார்த்த அவர்கள் இருவரும் இனிமேல் நிலசம்மந்தமாக நீங்க யாராவது நிலத்துவிட்ட வந்தால் உங்களை ஒழித்து கட்ட விடுவோம் என மிரட்டிவிட்டு மேற்படி அவரது இரண்டு சக்கர வாகனத்தை முருகன் எடுத்துக்கொண்டு அவர்கள் இருவரும் அங்கிருந்து சென்று விட்டார்கள். பின்னர் எனக்கு வலி அதிகமாக இருந்ததால் எனது மாமா மாது உதவியுடன் ராயக்கோட்டை ஆரம்ப சுகாதாரநிலையம் வந்து அங்கு முதல்சிகிச்சை செய்தார். பின்னர் தகவல் தெரிந்து அங்கு வந்த வழக்கறிஞர் வெங்கடேஷ் குமார் உதவியுடன் மேல்சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு வந்து சேர்ந்தேன். இங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த என்னை ராயக்கோட்டை போலிஸ் நீங்கள் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து படித்து காண்பித்தீர்கள். நான் சொன்னது போலவே சரியாக உள்ளது என்று கூறியிருக்கிறார். அ.த.சா.ஆ.1 புகாரை நிரூபிக்கும் விதமாக அ.சா.1 சாட்சியம் உள்ளதா என்றும், முதலில் 1, 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவு 341ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்கையில்,

இவ்வழக்கில் அ.சா.1 வந்ததாக சொல்லும் இரு சக்கர வாகனம் எண் TN 70 U 5049 Hero HF Delux என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. அதேபோல் அ.சா.1 வந்த இருசக்கர வாகனத்தை எதிரிகள் இருசக்கரவாகனத்தில் வந்து குறுக்கே அ.சா.1 வண்டியை நிறுத்தி அ.சா.1 ஐ தடுத்ததாக அரசு தரப்பில் கூறப்பட்டிருக்கிறது. இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரிகள் வந்ததாக சொல்லப்படும் இருசக்கர வாகனம் கைப்பற்றி அரசு தரப்பில் தாக்கல்

செய்யபடவில்லை.

அ.சா.1 அவரது புகாரிலும் அவரது சாட்சியத்திலும் எதிரிகள் என்னவகையான இருசக்கர வாகனம் என்றோ அந்த வாகனத்தின் கலர் மற்றும் பதிவு எண் போன்ற எதுவும் கூறவில்லை.

அ.சா.2 சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டிருக்கிறார். அவர் தனது சாட்சியத்தில், அ.சா.1 கோடிபுதூரில் வந்த போது எதிரி செல்வராஜ் வண்டி ஓட்டி இருந்தார். முருகன் பின்னால் அமர்ந்து வந்தார். எதிர்புறம் வந்து வண்டியை நிறுத்தி விட்டு அ.சா.1 ஐ வெட்ட வந்துள்ளார்கள்.

சம்பவத்தை நேரில் பார்த்த அ.சா.2 அவரது சாட்சியத்தில் எதிரிகள் இருவரும் இரு சக்கர வாகனத்தில் அ.சா.1 வந்த இருசக்கர வாகனத்தை தடுத்து நிறுத்தியதாக சாட்சியம் அளிக்கவில்லை. இவ்வழக்கில் வேறு எந்த சாட்சியும் எதிரிகள் இருவரும் அ.சா.1 வந்த வாகனத்தை எதிரிகள் இருவரும் இரு சக்கர வாகனத்தில் வந்து தடுத்து நிறுத்தியதாக சாட்சியம் அளிக்கவில்லை.

எதிரிகள் இருவரும் இருசக்கர வாகனத்தில் அ.சா.1 வந்த இருசக்கர வாகனத்தை தடுத்து நிறுத்தியதாக எந்த சாட்சியும் இந்த குற்றச்சாட்டை நிரூபிக்கும் வண்ணம் சாட்சியம் அளிக்கவில்லை. அதே சமயம் அரசு தரப்பிலும் அ.சா.1 வந்த இரு சக்கர வாகனத்தையும் எதிரிகள் வந்ததாக சொல்லப்படும் இரு சக்கர வாகனத்தையும் இவ்வழக்கில் கைப்பற்றி ஆஜர்படுத்தி இ.த.ச. பிரிவு 341ன் படியான குற்றச்சாட்டை அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை.

1வது எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவு 427 ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்கையில், அ.சா.1 அவரது புகாரில் நான் வண்டியிலிருந்து கீழே விழுந்தபோது எனது மைக்ரோமேக்ஸ் செல்போன் கீழே விழுந்துவிட்டது. அதை செல்வராஜ் எடுத்து கீழே போட்டு உடைத்துவிட்டார் என்று கூறியிருக்கிறார். ஆனால் அ.சா.1 அந்த மைக்ரோமேக்ஸ் செல்போனின் மாடல் மற்றும் அந்த செல்போனின் எண் எதுவும் கூறவில்லை. அ.சா.1 அவரது சாட்சியத்தில் எனது பாக்கெட்டிலிருந்து போன் கீழே விழுந்தது. அதை எதிரி செல்வராஜ் எடுத்து தரையில் போட்டு உடைத்துவிட்டார் என்று கூறியிருக்கிறாரே ஒழிய அது மைக்ரோமேக்ஸ்

செல்போன் என்று கூறவில்லை.

வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்தாக சொல்லப்படும் அ.சா.2 அவரது சாட்சியத்தில் எதிரி செல்வராஜ் அ.சா.1 ன் செல்போனை உடைத்ததாக எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை.

இவ்வழக்கில் அரசு தரப்பில் 1 வது எதிரி செல்வராஜ் உடைத்தாக சொல்லப்படும் அ.சா.1 ன் செல்போன் அரசு தரப்பில் கைப்பற்றி இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், அரசு தரப்பில் 1 வது எதிரியால் உடைக்கப்பட்டதாக சொல்லப்படும் செல்போன் அ.சா.1 ன் உடையது என்பதற்கு அந்த செல்போன் வாங்கியதற்கான ரசீதோ அல்லது அந்த உடைந்த செல்போன் பாகங்களையோ அரசு தரப்பில் இவ்வழக்கில் தாக்கல் செய்யாததால் அரசு தரப்பில் 1 வது எதிரிக்கு எதிராக இ.த.ச. பிரிவு 427 ன் படியான குற்றச்சாட்டை அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை.

இவ்வழக்கில் 2 வது எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவு 307 மற்றும் 1 வது எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவு 307 உ/இ 34 ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளா என்று பார்கையில்,

அ.சா.1 அவரது புகாரில் முருகன் மறைத்து வைத்திருந்த கொடுவாளால் எனது வலது புற கழுத்தில் வெட்ட வந்த போது நான் சாய்ந்து கொண்டதால் அவன் எனது வலது முழங்காலில் வெட்டியதில் பலத்த ரத்தகாயம் ஏற்பட்டுவிட்டது. செல்வராஜ் அவரது மகனிடம் ஓடிவிடுவான் முதலில் அவனது காலை வெட்டுடா முருகா என்று சொன்னபோது முருகன் அதே கொடுவாளால் மீண்டும் எனது வலது முழங்காலில் வெட்டி இரத்த காயத்தை ஏற்படுத்தினார் என்று கூறியிருக்கிறார். ஆக, அ.த.சா.ஆ.1 புகாரின்படி 2 வது எதிரி முருகன் அ.சா.1 ன் வலது காலில் இரு முறை வெட்டியதாக கூறப்பட்டிருக்கிறது. இது அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்கையில்,

அ.சா.1 அவரது சாட்சியத்தில் எதிரி முருகன் கொடுவாளை எடுத்து வந்து எனது கழுத்தை வெட்ட வந்தார் என்றும், தான் இடது பக்கம் சாய்ந்து விட்டேன். அவர் வீசிய அருவாள் தனது இடது காலில் முட்டிக்கு அருகில் வெட்டி விட்டது. நான் வண்டியில் இருந்து சாய்ந்தேன் என்றும், மீண்டும் செல்வராஜ் அவன் ஓடிவிடுவான் அவன் காலை வெட்டு டா முருகா என்று சொன்னார் என்றும், முருகன் கொடுவாளால் எடுத்து எனது

இடது காலில் முழங்கால் பகுதியில் வெட்டி விட்டார் என்றும் அவர் சாட்சியம் அளித்திருக்கிறார். ஆக, அ.சா.1 சாட்சியத்தின் படி 2வது எதிரி முருகன் அ.சா.1 ன் இடது காலில் வெட்டியதாக சாட்சியம் அளித்திருக்கிறார்.

வழக்கு சம்பவந்ததை நேரில் பார்த்ததாக சொல்லப்படும் அ.சா.2 அவரது சாட்சியத்தில், எதிரி முருகன் அ.சா.1 ன் எந்த பக்கம் உள்ள காலை வெட்டினார் என்று எதுவும் கூறவில்லை.

அ.சா.1 அவரது அ.த.சா.ஆ.1 புகாருக்கு மாறாக அதாவது புகாரில் எதிரி முருகன் தனது வலது காலில் வெட்டிதாக கூறியுள்ள நிலையில் அ.சா.1 அவரது நீதிமன்ற சாட்சியத்தில் எதிரி முருகன் தனது இடது காலில் வெட்டியாக சாட்சியம் அளித்திருப்பதில் இருந்து அ.சா.1 சாட்சியத்தின் மூலம் அ.த.சா.ஆ.1 புகார் நிரூபிக்கப்படவில்லை.

இவ்வழக்கில் அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கு காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர் அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் அ.சா.1 ற்கு வலது காலில் 4 X 1 cm வெட்டுக்காயம் இருந்ததாகவும் கூறியிருக்கிறார். அ.சா.8 மருத்துவர் அவரது குறுக்கு விசாரணையில் சூர்யா கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் 1நாள் சிகிச்சையில் இருந்தார். அவர் 20 ம் தேதி Against மெடிக்கலில் சென்றுவிட்டார் அவரை Discharge செய்யவில்லை.நான் அளித்த Wound certificate நான் வழங்கிய தேதி குறிப்பிட்டு கூறப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.நான் மாரதி நர்சிங் ஹோம் அளித்த Discharge Summary ல் தான் Wound certificate வழங்கினேன்.நான் எதன் அடிப்படையில் கொடிய காயம் என்று சான்று வழங்கினேன் என்றால் மாரதி நர்சிங்கோமில் அளித்த Discharge Summary ல் வலது காலில் எலும்பு முறிவு என்று மிக தெளிவாக போடப்பட்டுள்ளது. இன்று நீதிமன்றத்தில் போலீசாரல் அந்த x–ray சமர்ப்பிக்கவில்லை என்று தெரிந்து கொண்டேன். அந்த 2யம் வைத்து தான் நான் காயச்சான்றிதழ் அளித்தேன் என்று சாட்சியம் அளித்திருக்கிறார். ஆக, அ.சா.8 அரசு மருத்துவர் அ.சா.1 ற்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை அளித்து அந்த காயத்திற்கு அவர் அ.த.சா.ஆ.5 காயச்சான்றிதழ் வழங்கவில்லை என்பது தெரியவருகிறது. அ.சா.8 மருத்துவர் அ.சா.1 ற்கு மாருதி நர்சிங் ஹோமில் அளித்த

Discharge summary மற்றும் wound certificate ஐ வைத்து காயச்சான்றிதழ் வழங்கியிருக்கிறார். ஆனால், இவ்வழக்கில் அரசு தரப்பில் மாருதி நர்சிங் ஹோமில் வழங்கப்பட்டுள்ளதாக சொல்லப்படும் Discharge summary மற்றும் wound certificate தாக்கல் செய்யப்படவில்லை. பின்னர் எவ்வாறு அ.சா.8 மருத்துவர் அ.த.சா.ஆ.5 ஐ வழங்கினார் என்பது அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. இவ்வழக்கில் அ.சா.1 மாருதி நர்சிங் ஹோமில் எந்த தேதியில் சேர்ந்தார் என்றோ அவர் எந்த தேதியில் விடுவிக்கப்பட்டார் என்றோ மற்றும் அவர் அந்த மருத்துவமனையில் சிசிக்கை எடுத்துக்கொண்டதற்கு அந்த மருத்துவரை இவ்வழக்கில் அரசு தரப்பில் ஒரு சாட்சியாக சேர்த்து அது குறித்து எதுவும் அரசு தரப்பில் எதுவும் நிரூபிக்கப்படவில்லை.

எதிரிகள் தரப்பில் அ.சா.1 ஓசூர் காவிரி மருத்துவமனை 20.03.2017 முதல் 31.03.2017 வரை சிகிச்சை பெற்றதற்கு அ.சா.1 ன் விடுவிப்பு சான்று எ.த.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வழக்கு சம்பவ நாள் 19.02.2017 ஆகும். எ.த.சா.ஆ.1 ன் படி அ.சா.1 ஓசூர் காவிரி மருத்துவமனை சுமார் 1 மாதம் கழித்து சேர்ந்திருப்பது தெரியவருகிறது. ஆக, அ.சா.1ற்கு வழங்கப்பட்டுள்ள அ.த.சா.ஆ.5 காயச்சான்றிதழ் 19.02.2017 அன்று ஏற்பட்டுள்ளதாக சொல்லப்படும் காயத்திற்கு வழங்கப்பட்டதாக தெரியவரவில்லை. மேலும். எ.த.சா.ஆ.1ல் அ.சா.1 தரையில் கீழே விழுந்ததில் காயம் ஏற்பட்டதாக தெரியவருகிறது.

அ.சா.1 அவரது புகாரில் சம்பவம் நடந்த உடன் தனது மாமா மாது உதவியுடன் ராயக்கோட்டை ஆரம்ப சுகாதாரநிலையம் வந்து அங்கு முதல் சிகிச்சை செய்தார். பின்னர் தகவல் தெரிந்து அங்கு வந்த வழக்கறிஞர் வெங்கடேஷ் குமார் உதவியுடன் மேல்சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு வந்து சேர்ந்தேன் என்று கூறியிருக்கிறார். இவ்வழக்கில் அரசு தரப்பில் ராயக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் யாரும் அரசு தரப்பில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை. மேற்படி ராயக்கோட்டை ஆரம்ப சுகாதரா நிலைய மருத்துவர் யாரும் அரசு தரப்பில் சாட்சியாக சேர்க்கப்படாததால் அ.சா.1 முதலில் ராயக்கோட்டை முதலில் ராயக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் சேர்ந்தார் என்பது அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை.

எதிரிகள் தரப்பில் எதிரிகளுக்கும் அ.சா.1 ற்கும் ஏற்கனவே இருந்த முன்பகை காரணமாக 19.02.2017 அன்று எதிரிகள் இருவரையும் அ.சா.1 சூரியா, அ.சா.2 சம்பவ சாட்சி மாது மற்றும் கேள்விப்பட்ட சாட்சி அ.சா.5 சண்முகம் ஆகியோர்கள் மீது இவ்வழக்கு எதிரிகளை 19.02.2017 அன்று காலை 08.30 மணிக்கு எதிரிகள் இருவரையும் மேற்படி சூரியா, மாது மற்றும் சண்முகம் ஆகியோர்கள் தாக்கியதாக அவர்கள் மீது பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கை குற்ற எண் 55/2017 எதிரிகள் தரப்பில் எ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வழக்கு குற்ற எண் 54/2017 ல் வழக்கு சம்பவம் காலை 09.00 மணிக்கு நடந்ததாக கூறப்படுவது அரசு தரப்பில் சாட்சிகள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் நிரூபிக்கப்பட்டதாக தெரியவரவில்லை.

அ.சா.1 அவரது புகாரில் அவருக்கு வலது காலில் வெட்டுக்காயம் ஏற்பட்டதாக கூறியுள்ள நிலையில் அ.சா.1 அவரது நீதிமன்ற சாட்சியத்தில் தனது இடது காலில் வெட்டுக்காயம் ஏற்பட்தாக கூறுவது நம்பும்படியாகவும் ஏற்கும்படியாகவும் இல்லை.

அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.த.சா.ஆ.10 கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அ.த.சா.ஆ.11 படிவம் 91ல் உள்ள கொடுவாளின் நீளம் மற்றும் கொடுவாள் என்பது அடித்து திருத்தம் செய்து தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. மேற்படி கைப்பற்றுதல் மகஜர் மற்றும் படிவம் 91 ல் உள்ள அடித்தல் திருத்தம் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.12 ஆல் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும், நீதிமன்றத்தில் அ.சா.பொ .1 ஐ எதிரிகள் தரப்பில் அளவீடு செய்து காட்டியபோது அ.சா.பொ.1க்கான கைப்பற்றுதல் மகஜர் மற்றும் படிவம் 91 ல் உள்ள அளவுகளோடு மாறுபாடு இருப்பது புலன்விசாரணை அதிகாரி அ.சா.12 ஆல் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இவ்வழக்கில் அ.சா.பொ.1ல் ரத்தக்கரை இருந்ததாக அதை கைப்பற்றிய அதிகாரியிடம் அ.சா.12 புலன் விசாரணை அதிகாரி விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்திருக்கிறார். அ.சா.பொ.1 ம் ஆய்வகத்திற்கு அனுப்பி அறிக்கை எதுவும் பெறப்படவில்லை. அ.சா.பொ.1ல் உள்ள ரத்தமாதிரியும் அ.சா.1ன் ரத்தமாதிரியும் ஒன்று என்று நிரூபிக்கவேண்டிய பொறுப்பு உள்ள நிலையில் அது அரசு தரப்பில்

நிரூபிக்கப்படவில்லை.

19.02.2017 அன்று அ.சா.பொ.1 முழுக்கால் பேண்ட் அணிந்துள்ளதாக சொல்லப்படும் நிலையில் அந்த பேண்டும் அரசு தரப்பில் கைப்பற்றப்பட்டு ஆய்வகத்திற்கு அனுப்பி அறிக்கை எதுவும் பெறப்படவில்லை.

அ.சா.3 முதல் அ.சா.5 ஆகியோர்கள் இவ்வழக்கில் கேள்விப்பட்ட சாட்சிகள் ஆவார்கள். அவர்களது சாட்சியத்தின் மூலம் அரசுதரப்வு வழக்கு அரசு தரப்பில் கூறப்படுவது போல் நிரூபிக்கப்படவில்லை.

அ.சா.6 பார்வை மகஜர் சாட்சியாவார். அவர் தனது சாட்சியத்தில் பார்வை மகஜர் என்ன எழுதியுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியாது. போலிசார் கேட்டதால் நான் கையெழுத்து போட்டேன். சம்பவ இடத்தில் வேறு நபர்கள் குடியிருக்கிறார்கள். அ.சா.1 எனது பேரன் என்று சாட்சியம் அளித்திருப்பதிலிருந்து அ.சா.6 சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பில் பார்வை மகஜர் நிரூபிக்கப்படவில்லை என்பது தெரியவருகிறது.

அ.சா.9 ஆனவர் அ.சா.1 டம் புகாரினை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்த உதவி ஆய்வாளர் ஆவார். அ.சா.12 புலன் விசாரணை அதிகாரி ஆவார். இவ்வழக்கு புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட அ.சா.1 சாட்சியத்தின் மூலமும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 சாட்சியத்தின் மூலமும் கேள்விபட்ட சாட்சிகளான அ.சா.3 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் மூலமும் அ.சா.6 பார்வைமகஜர் சாட்சி மூலமும் அ.சா.8 மருத்துவர் சாட்சி மூலமும் அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்படாத நிலையில் அ.சா.9 மற்றும் அ.சா.12 காவல் துறை அதிகாரிகளின் சாட்சிகளை வைத்துக்கொண்டு 1, 2 எதிரிகள் மீதான குற்றச்சாட்டு எதிரிகளுக்கு எதிராக அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் நிரூபிக்கப்பட்டதாக முடிவுக்கு வர இயலாது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

9. எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து 1வது எதிரி மீது இதச பிரிவு 341, 307 உ/இ 34, 427 ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மற்றும் 2வது எதிரி மீது இதச பிரிவு 341 மற்றும் 307 ன் கீழ் வனையப்பட்ட

குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பு சாட்சிகளில் இருந்து சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட வகையில் அரசு தரப்பில் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**முடிவு:**

1வது எதிரி மீது இதச பிரிவு 341, 307 உ/இ 34, 427 ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மற்றும் 2வது எதிரி மீது இதச பிரிவு 341 மற்றும் 307 ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து கு.வி.மு.ச 235 (1) ன் கீழ் இந்த வழக்கிலிருந்து 1 மற்றும் 2 எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று முடிவு செய்து இந்த வழக்கிலிருந்து 1 மற்றும் 2 எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**வழக்கு சொத்து விவரம்**

அ.சா.பொ.1 கொடுவாளை மேல் முறையீடு காலம் முடிந்த பிறகு அல்லது மேல் முறையீடு செய்யாத பட்சத்தில் அழிக்க உத்தரவிடப்படுகிறது. மேல்முறையீடு செய்யப்பட்டால் மேல்முறையீடு நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவின்படி செயல்பட உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்குச் நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sub Judge

S VIJAY ALAGIRI

Digitally signed by S VIJAY ALAGIRI
Location: Denkanikottai
Date: 2026.04.27 16:28:09 +0530

**இணைப்பு:–**

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| அ.சா.1 | சூர்யா |
| அ.சா.2 | மாது |

| | |
|---|---|
| அ.சா.3 | மாதம்மாள் |
| அ.சா.4 | வெங்கடேஷ்குமார் |
| அ.சா.5 | சண்முகம் |
| அ.சா.6 | அரிச்சந்திரன் |
| அ.சா.7 | மாரியப்பன் SSI |
| அ.சா.8 | Dr. சங்கீதபிரியா |
| அ.சா.9 | மகாதேவன் Inspector |
| அ.சா.10 | மாரியப்பன் SSI |
| அ.சா.11 | பெரியதம்பி வட்ட ஆய்வாளர் |
| அ.சா.12 | கமலேசன் காவல் ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.2 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.3 | நீதிமன்றத்திற்கு சொடுக்கப்பட்ட சாட்சி சம்மன் |
| அ.த.சா.ஆ.4 | ஆய்வாளர் வழங்கிய கடிதம் |
| அ.த.சா.ஆ.5 | காயச்சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.6 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.7 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.8 | வரைபடம் |
| அ.த.சா.ஆ.9 | வேண்டுகோள் கடிதம் |
| அ.த.சா.ஆ.10 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.த.சா.ஆ.11 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.12 | படிவம் 95 |

**சான்று பொருட்கள்**

| | |
|---|---|
| சா.பொ.1 | கொடுவாள் |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| எ.த.சா.1 | செல்வராஜ் |

**எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்:–**

| | |
|---|---|
| எ.த.சா.ஆ.1 | காவேரி மருத்துவமனையின் வழங்கிய விடுவிப்பு சான்றிதழ் நகல் |
| எ.த.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| எ.த.சா.ஆ.3 | குற்ற எண் 55/2017 க்கான இறுதி அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| எ.த.சா.ஆ.4 | குற்ற எண் 55/2017 க்கான பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் |
| எ.த.சா.ஆ.5 | குற்ற எண் 55/2017 வழக்கில் சாட்சிகளின் பட்டியல் நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| எ.த.சா.ஆ.6 | குற்ற எண் 55/2017 ல் சாட்சிகளின் வாக்குமூலங்களின் நீதிமன்ற சான்றிட்ட நகல் |
| எ.த.சா.ஆ.7 | குற்ற எண் 55/2017 ன் காயச்சான்றிதழின் நீதிமன்ற சான்றிட்ட நகல் |

Sub Judge

S VIJAY ALAGIRI

Digitally signed by S VIJAY ALAGIRI
Location: Denkanikottai
Date: 2026.04.27 16:28:00 +0530